**<u>சார்பு நீதிமன்றம், செஞ்சி</u>**

**அ.வ.எண்.95/2017** **நாள்.19.11.2024**

2024-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19-ம் நாள் வாதி தரப்பு **2ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகன்நாதன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | கோவிந்தராஜ் | சாதி | |
| கிராமம் | சின்னநொளம்பை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 52 |

**<u>வா.சா.2</u>**
**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுதபடிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். சாட்சியம் அளிக்க எனக்கு சம்மன் எதுவும் வரவில்லை. வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி தாவா சொத்து அவருடைய சொத்து என வழக்கு தாக்கல் செய்துள்ளார். எந்நெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சர்வே எண் 51/2 2.37 செண்ட், சர்வே எண் 51/2 3 எச்.பி மோட்டார், பம்பு செட், சர்வீஸ் எண்.3, சர்வே எண் 50/1 18 செண்ட், சர்வே எண் 51/2 16 செண்ட் ஆகும். மேற்படி சர்வே எண்களுக்கான சக்குபந்தி எனக்கு தெரியாது. அவர் மேற்படி விவரங்கள் வாதி வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது வாதி சொல்லிதான் எனக்கு தெரியும்.

வாதி அவரது சகோதரர்களுடன் 17.02.1989ல் பாககூர்சீட்டு எழுதிகொண்டனர் என பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள் யார் யார் முன்னிலையில் பாககூர்சீட்டு எழுதப்பட்டது என குறிப்பிட்டு கூறியுள்ளீரா என்றால் இல்லை. அதேபோல் எந்த ஊரில் எழுதப்பட்டது என்ற விவரமும் கூறப்படவில்லை என்றால் சரிதான். கூர்சீட்டில் நான் 7வது நபராக சாட்சிகையொப்பம் போட்டுள்ளேன். கையொப்பம் ஆங்கிலத்தில் போட்டுள்ளேன். மற்ற 6 சாடசிகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியும். கூர்சீட்டில் ஒரேயொரு கையெழுத்து மட்டும் தான் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் வேறு எந்த பேப்பரிலும் நான் கையெழுத்து செய்யவில்லை.

தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதியின் சகோதரர் ராஜமாணிக்கம் பெயரில் தான் உள்ளது என்றால் சொத்துக்கள் பொதுவில் வாங்கப்பட்டது. ராஜமாணிக்கம் மூத்தவர் என்பவதால் அவர் பெயரில் கிரையம் பெறப்பட்டது. 2016ல் ராஜமாணிக்கம் அவரது மகள்களுக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை படித்து பார்த்தீர்களா என்றால் படிக்கவில்லை. ராஜமாணிக்கம் தனிப்பட்ட முறையில் வாங்கிய

சொத்தை தான் அவரது மகள்களுக்கு தானமாக எழுதிவைத்தார் என்றால் தவறு. வழக்கு சொத்திற்குரிய பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் கூட்டுபட்டாவாக தான் உள்ளது. வாதி பெயரில் தனியாக தாக்கல் ஆகவில்லை. வாதியும் நீங்களும் ஒரே ஊரைசேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

(என்னுடைய நிருபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).